## தலைப்பு 228 – நீதிமன்ற நிர்வாகத் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீதிமன்ற நிர்வாகத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நீதிமன்ற நிர்வாகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும், அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூலை 10 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் நீதி நிர்வாகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 18 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட இந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நீதிமன்ற நிர்வாகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும், நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் , மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள் , செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்செல்வதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு, அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ, கூட்டாகவோ தாக்கமளிப்பதால், பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தை இனங்காணும் போதும், மதிப்பீட்டின்போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச்செய்தல், மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும்போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் , சம்பவங்கள் பொருத்தமாகவும், நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்கியதாகவும்,

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும் .

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிநிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதியல்லா சொத்துக்களுக்கான கூற்றில் (ஏசீஏ-6) மீளாய்வாண்டின் ஆரம்ப மிகுதி மற்றும் சென்ற ஆண்டின் இறுதி மிகுதிக்கடையில் ரூபா 3,011,069,162 க்கான வேறுபாடு இருந்ததுடன் இது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பொன்றின் மூலமாவது வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | சம்பந்தப்பட்ட வேறுபாடு பற்றி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | கணக்காய்வு விசாரிப்பில் காட்டப்பட்டுள்ள சென்ற ஆண்டின் நிதியல்லாத சொத்துக்களுக்கான கூற்றில் இறுதி மிகுதியினை மீளாய்வாண்டின் ஆரம்ப மிகுதியாக உட்படுத்தும் போது ரூபா 3,011,069,162 க்கான வேறுபாட்டுக்கும் காரணம் மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதியினை ஆரம்ப மிகுதியாக உட்படுத்தலும், பிரதான காரியாலயத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு ஏனைய நீதிமன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் சொத்துக்கள் பிரதான காரியாலயத்தில் 'சிகாஸ்' |

| | | | |
|---|---|---|---|
| | | | நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து அகற்றப்பட்டு சம்பந்தப்பட்ட மேல் நீதிமன்த்தில் ஆரம்ப மிகுதியாக சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் உட்படுத்துவதாகும். |
| (ஆ) | மீனாய்வாண்டில் வேலை ஆரம்பிக்கப்பட்ட நாவுலை நீதிவான நீதிமன்றத்தின் உத்தியோகபூர்வ இல்ல நிர்மாணத் திட்டம் தொடர்பாக 2019 பெப்ரவரி மாதம் 15 ஆந் திகதி கொடுக்கப்பட்ட ரூபா 4,255,520 க்கான வேலை முற்பணத்தில் அறவிடப்படாத ரூபா 3,700,452 வும் சென்ற ஆண்டில் 04 நிர்மாணத் திட்டங்கள் மற்றும் 2017 ஆண்டில் 02 நிர்மாணத் திட்டங்கள் தொடர்பாக கொடுக்கப்பட்ட ரூபா 38,667,610 க்கான வேலை முற்பண பணத்தில் மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்படாத ரூபா 23,130,608 வும் நிதிச் சொத்தின் கீழ் முற்பண கணக்கு மற்றும் கூலி மற்றும் வேலை முற்பண ஒதுக்கல் கணக்கிற்கு உட்படுத்தப்படாமையினால் நிதிக் கூற்றில் மொத்த சொத்துக்கள் மற்றும் மொத்தப் பொறுப்புக்கள் மீதிகள் ரூபா 26,831,060 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய இலக்கம் 250/2016(1) கொண்ட பொதுக் கணக்கு சுற்று நிருபனத்தின் படி கூறி மற்றும் வேலை முற்பண ஏசீஏ-05(ஏ) படிவத்தில் உட்படுத்தப்பட வேண்டும். | 2019 யூலை 10 ஆந் திகதிய 2018 ஆண்டிற்கான கணக்காய்வு அதிபதியின் பொழிப்பறிக்கையின் மூலம் இது தொடர்பாக விசாரிதத்தின் பின்பு ஆரம்பிக்கப்பட்ட சகல திட்டங்களுக்காக வெளியிடப்பட்ட முற்பணத்திற்கான பொ.க. சு 250/2016(I) இல் 3 மற்றும் 4 பந்தியின் படி முற்பணம் கொடுப்பது மற்றும் அறவிடுதல் கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு விசாரிப்புக்கு முன்பு இத்திட்டங்களுக்கான முற்பணம் கொடுக்கப்பட்டிருந்தமை யினால் வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணத்திற்கான கணக்கு ஆரம்பிக்கப்படவில்லை. |

### 1.6.2 கட்டு நிதி மிகுதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1999 மற்றும் 2000 வருடங்களில் சமப்படுத்தப்படாது இருந்த ரூபா 200,432,502 க்கான கட்டுநிதி மிகுதிக்கான நிதி நிலைமை பற்றிய கூற்றில் குறிப்பிடப்படாமையினால் நிதிச் சொத்திற்கான மிகுதி மற்றும் நடைமுறைப் பொறுப்பின் மிகுதி அப்பெறுமானத்திலிருந்து குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சமப்படுத்தப்படாத கட்டுநிதி மிகுதி நிதி நிலைமைக்கான கூற்றில் உட்படுத்தப்பட வேண்டும். | ரூபா 200,432,502 க்கான மற்றும் 1999 மற்றும் 2000 ஆண்டுகளில் சமப்படுத்தப்படாத கட்டுநிதி மிகுதி முன்னேற நிதி நிலைமைக்கான கூற்றில் நிதி சொத்தின் கீழ் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.3 சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவைகளுடன் இணங்காமை

மாதிரிகளுக்கான கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டம், ஒழுங்கு, பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே ஒப்பிட்டுக் காட்டப்படுகின்றன.

| சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான கவனத்திற்கு | இணங்காமை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) நிதிப் பிரமாணம் 109(1) மற்றும் (2) | 2 வருடம் முதல் 10 வருட காலத்தினுள் 62 சந்தர்ப்பங்களில் வாகன விபத்துக்கள் தொடர்பாக ஏற்பட்டுள்ள ரூபா 3,091,292 க்கான இழப்புக்கள் சம்பந்தமாக நிதிப் பிரமாணத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 109(1) மற்றும் (2) படி செயல் பட வேண்டும். | விசாரணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் இழப்பீடுகள் பல வருடங்கள் பழமை வாய்ந்த இழப்புக்குள்ளான படியால் அது சம்பந்தமாக விசாரணை நடத்துவதில் உள்ள நடைமுறை சிக்கல்களை தீர்த்துக் கொண்டு அதன்படி தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 317 | நுகேகொடை நீதிவான்நீதிமன்ற இருப்புப் பீரோக்களின் இரண்டு பூட்டுக்களின் சாவிகளும் ஒரு நபரின் பொறுப்பில் இருந்ததுடன் வழக்குத் தொடர்பான பொருட்க்ள வைக்கப்பட்டிருக்கும் அறையின் நுழைவாயில் சாவி வழக்கு பொருட்களுக்கு பொறுப்பான நீதிமன்ற எழுதுவினைஞராக சேவையாற்றும் உத்தியோகத்தர் தனிப்பட்ட முறையில் கொண்டு வருவது போவதுமான செயலில் ஈடுபட்டிருந்தார். | நிதிப் பிரமாணம் 317 ஏற்றபடி நடந்து கொள்ளுதல் வேண்டும். | 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி ஆகியும் பதிலளிக்கப்படவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 342 | நுகேகொட நீதிவான் நீதிமன்றத்தில் காசு பொறுப்பேற்கும் வரவு சீட்டு புத்தகம் மற்றும் காசோலை புத்தகம் விடய எழுதுவினைஞரிடம் இருந்ததுடன் பாவனை செய்யப்பட்ட காசு வரவுச் சீட்டுப் புத்தகம் சரப்பிடம் இருந்தது. | நிதிப்பிரமாணம் 342 இன் பிரகாரம் செயல்பட வேண்டும். | 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதியாகியும் பதிலழிக்கப்படவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் 18 மேல்நீதிமன்ற வலயத்திற்கான 47 வங்கிக் கணக்குகளின் முன்வைக்கப்படாத 06 மாதங்கள் கடந்த ரூபா 1,564,177 க்கான காசோலை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நுகேகொடை நீதிவான் நீதமன்றம் மற்றும் மாத்தளை மாவட்ட நீதிவன் நீதிமன்றத்திற்கு சம்பந்தமான வங்கிக் கணக்குகளில் 06 மாதங்களை கடந்த | நிதிப் பிரமாணம் 396(ஈ) பிரகாரம் செயல்பட வேண்டும். | நீதிமன்ற வலயங்களில் 06 மாதத்தினை கடந்த காசோலைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 396 இன் படி செயல்படும் படி சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முறையே ரூபா 25,000 பெறுமதியான 03 காசோலைகள் மற்றும் ரூபா 10,000 திற்கான காசோலை சம்பந்தமான நிதிக்கூற்றுக்களில் குறிப்பு (viii) கீழ் காட்டப்படவில்லை. | | |
| (v) | நிதிப்பிரமாணம் 582(1) | நுகேகொடை நீதிவான நீதிமன்றின் காசேட்டின்படி 2019 செப்தெம்பர் 04 ஆந் திகதிய நாளாந்த பெறுவனவான ரூபா 223,916 க்கான பணத்தினை 2020 சனவரி 20 அந் திகதி வரையிலும் வங்கியிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2019 வருட நாளாந்த பெறுவனவுகள் வங்கியிலடுவது சுமார் 2 முதல் 5 நாட்கள் வரையிலான காலம் தாமதப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் இருந்தன. | நிதிப்பிரமாணம் 582(1) அமைவாக செயல்பட வேண்டும். | 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரை விடையளிக்கப்படவில்லை. |
| (vi) | நிதிப் பிரமாணம் 586(1) | நுகேகொடை நீதிவான் நீதமன்றில் மதிப்பிற்குரிய நீதிவான்களினால் வழக்குகள் சம்பந்தப்பட்ட தண்டப்பணம் தொடர்பான குறிப்புக்கள் இடப்பட்டிருந்த போதிலும் அந்த தண்டப்பணம் அறவிடப்படுவது அல்லது அறவிடப் படாமைகளுக்கான விபரங்கள் நிதிப்பிரமாணத்தின் படி நடாத்தப்படுகின்ற பத்திரத்தில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 586(1) படி செயல்பட வேண்டும். | 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரை விடையளிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (vii) | நிதிப்பிரமாணம் 586(2) | நிலுவை தண்டப்பணத்திற்கான பத்திரமொன்று தனியாக நடாத்தப்பட வேண்டியிருந்த போதும் நுகேகொடை நீதிவான் நீதிமன்றில் 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதிக்குப் பின் ஆரம்பிக்கப்பட்ட நிலுவை தண்டப்பத்திரம் நாளதுவரை அடிப்படையில் நடாத்தப்படாமையினால் அரசுக்கு இதுவரை அறவாக இருக்கும் முழு நிலுவை தண்டப்பணம் எவ்வளவு என்பதனை இனங்கண்டு கொள்ள முடியாமல் இருக்கின்றது. | நிதிப்பிரமாணம் 586(2) படி செயற்பட வேண்டும். | 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரை விடையளிக்கப்படவில்லை. |
| (viii) | நிதிப்பிரமாணம் 880 மற்றும் 881 | அரச உத்தியோகத்தர்களின் பிணை அதிகாரச் சட்டத்திற்கு அமைவாக மற்றும் இலக்கம் 01/2011 மற்றும் 2011 சனவரி 18 ஆந் திகதிய நீதி அமைச்சின் சுற்று நிருபத்தின் மூலம் அறிவுறுத்தப்பட்டிருந்தது போன்று நுகேகொடை நீதிவான் நீதிமன்றில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் களிடமிருந்து பிணை வைப்புக்கள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 881 பிரகாரம் செயல் பட வேண்டும். | 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரை விடையளிக்கப்பட வில்லை. |
| (ix) | நிதிப்பிரமாணம் 891 | பிணை வைப்பு வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு பிணை பத்திரமொன்று தயாரிக்கப் பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 891 படி செயல்பட வேண்டும். | 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரை விடையளிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1987 இலக்கம் 3 கொண்ட பொது ஒப்பந்த சட்ட மூலத்தின் 8 ஆம் பிரிவு | நாவலப்பிட்டி நீதிவான் நீதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தினை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்திற்கு அமைவாக நீதி அமைச்சு மற்றும் ஒப்பந்தக்காரர் இடையில் 2019 செப்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி ரூபா 16,569,519 பெறுமதிக் கிணங்கி ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட எழுத்து மூல உடன்படிக்கை பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை. | 1987 இலக்கம் 3 கொண்ட பொது ஒப்பந்த சட்ட மூலத்தின் 8 ஆம் பிரிவின் படி செயல்பட வேண்டும். | நிர்மாணப் பணிகளுக்கான உடன்படிக்கைகள் பதிவு செய்வதற்கான காரியங்கள் சென்ற காலகட்டத்தினுள் உரிய முறையில் நடந்திருக்காததுடன் இப்போதைக்கு அது சம்பந்தமாக ஒப்பந்த நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டு அந்தப் பதிவு சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.7.1(ஆ) | கந்தலை நீதிமன்றத் தொகுதியினை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்திற்காக 2019 சனவரி 28 அந் திகதிய பெறுகைக் குழுவினது நிர்மாணப்படி அங்கீகார கடிதத்தினை 05 மாத காலம் தாமதிக்கப்பட்டு, 2019 யூன் 24 ஆந் திகதி கையளிக்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரின் மனு பிணைப் பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் 2019 யூன் 28 ஆந் திகதி முடிவுற்றிருந்த துடன் ஒப்பந்தக்காரர் ஒப்பந்தத்தினை ஏற்றுக் கொள்ளாமையினால் மனுப் பிணைப் பத்திரத்தினை காசாக்கி கொள்வதற்கு அமைச்சுக் முடியாது போய் இருந்தது. | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.7.1(ஆ) பிரகாரம் செயற்பட வேண்டும். | மனுப் பிணைப்பத்திரத்தினை செல்லுபடியாகும் காலத்தினை பிற்போடுவதற்காக போதிய காலம் கிடைக்காமையினால் மனுப்பிணையினை அறவிடுவதற்கு முடியாமல் போயிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் உடன்பாடுகள் செய்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 94(2) பிரகாரம் ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய பொறுப்புக்குட்படாத மீண்டெழும் செலவின 06 விடயங்களுக்காக ஏற்படுத்தியிருந்த தேறிய மீள் ஒதுக்கீடுகளை பயன்படுத்திய பின் சேமிப்பினை கடந்து ரூபா 11,991,505 க்கான பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொண்டு உள்ளது. | நிதிப் பிரமாணம் 94 படி நடவடிக்கை செயற்பட வேண்டியமை. | நி.பி 94(1) படி மீண்டெழும் சுபாவத்திலான செலவினத்திற்கான சென்ற 03 ஆண்டின் சராசரிக்கு அமைய 50 சதவீதம் வரையிலான ொபறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதற்கான இடமுண்டு. ஆகையால், நீதிமன்ற செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொள்ளுதல் அத்தியாவசியமானதாகும். நிதிப் பிரமாணத்தின் படி காட்டப்பட்டுள்ள வரையறைக்குள் மாத்திரம் பொறுப்புக்களுக்கான உடன்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்படுகின்றன. |
| (ஆ) | குறிப்பு இலக்கம் (iii) கீழுள்ள உடன்பாடு மற்றும் பொறுப்புக் கூற்று மற்றும் திறைசேரியினால் ஒவ்வொரு செலவின தலைப்புக்களுக்கு அமைவாக வெளியிடப்படும் உடன்பாடு மற்றும் பொறுப்புக் கூற்று (SA-92 படிவம்) இடையே ரூபா 7,927,289 க்கான வேறுபாடு இருந்தது. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய அரச கணக்குகள் சுற்று நிருப இலக்கம் 271/2019 இன் 3.4 பந்தியின் படி செயற்பட வேண்டும். | இப்பெறுமானம் முறைமையை வழுக்களால் உட்பட்டிருப்பதுடன் இப்பணத்தினை தொடர்ந்தும் செலுத்த வேண்டிய பெறுமானம் அன்று SA-92 படிவத்தின் ஒரு பகுதி மாத்திரம் அச்சானதால் இறுதி மிகுதி உள்ளான பந்தியுடனான பகுதி வருடாந்த நிதிக் கூற்றுக்களில் உட்பட்டு இல்லை. |

## 2.2 முற்பணம் செலுத்துதலும் சமப்படுத்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் வருடாந்த இணக்கக் கூற்று அறிக்கையின் படி நிலுவைக் கடன் மிகுதிகளின் கூட்டுத்தொகை ரூபா 23,062,490 ஆவதுடன் அதனுள் 05 வருடங்களுக்கு மேலான கடன் மிகுதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,964,872 ஆகும். அது மொத்த நிலுவைக் கடன் மிகுதியில் நூற்றுக்கு 35 அளவாக இருந்தது. | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய இக்கம் 118 கொண்ட தேசிய வரவு செலவு சுற்றுநிருபத்தின் 1 மற்றும் 3 பந்தியும் தாபனக் கோவையின் xxiv ஆம் பந்தியின் 4 ஆம் பிரிவின் மீது கவனம் செலுத்தப்படல் வேண்டும். | 05 வருடங்களுக்கு மேல் கழிந்துள்ள அரசுக்கு சேர வேண்டிய அதிகமான நிலுவைக் கடன் மிகுதிகள் 1990 ஆம் தசாப்தத்திலிருந்து அறவிடாதிருக்கும் கடன் மிகுதிகளாகும். இது சம்பந்தமாக முன் நடவடிக்கை எடுப்பதற்கு அதிகப்படியான கடன் மிகுதிகளின் தகவல்கள் நீதிமன்றங்களில் இல்லாமையினால் இக்கடன் மிகுதிகளை தள்ளுபடி செய்யவும் இல்லாது இருக்கிறது. |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு தனிநபர் கடன் மிகுதி தரப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகையும் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கு மிகுதிக்குமிடையில் ரூபா 12,527,622 க்கான வேறுபாடு காணப்பட்டது. மேலும் இவ்வேறுபாட்டுக்கான மேலும் இவ்வேறுபாட்டுக்கான காரணம் விளப்படுத்தப்பட்டிருக்க வில்லை. சென்ற மூன்று அண்மைக்கால வருடங்களுக்கான மிகுதிகளும் இவ்வாறு இணங்காது இருந்ததுடன் அச்சந்தர்ப்பங்களிலும் வேறுபாட்டினை தேடிக் கண்டுபிடித்து திருத்துவதாக குறிப்பிட்டிருந்தாலும் கூட நிறைவேற்றப்படவில்லை. | 2017 யூலை 05 ஆந் திகதிய பொதுக்கணக்கு சுற்று நிருபத்தின் 256/2017 இல் 05 ஆம் பந்திக்கமைய தனிநபர் கடன் மிகுதி தரப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகையும் தணைக்கள கட்டுப்பாட்டு கணக்கின் மிகுதிக்கிடையில் வேறுபாடு இருக்கும் போது அவ்வேறுபாட்டுக் கான காரணத்தினை விளக்கமாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். | தனிநபர் கடன் மிகுதி தரப்படுத்தல் பொழிப்பினை மற்றும் கட்டுப்பாட்டு கணக்குக்கிடையில் இருக்கும் இந்த இணங்காமை 90 ஆம் தசாப்தத்திலிருந்து தொடர்வதுடன் விசேடமாக மேல் நீதிமன்ற வலயங்களுக்கிடையில் உள்ளக இடமாற்றங்களின் கீழ்கடன் மிகுதிகளை தீர்த்துக்கொள்ளும் போது ஏற்பட்டுள்ள தவறுகள் இதற்கான காரணிகளாக உள்ளன. அதே வேலை சம்பந்தப்பட்ட தவறுகளை திருத்திக் கொள்வதற்கு இப்போது மேல் நீதிமன்ற வலயத்துடன் இணைத்து செயல்பட்டு வருவதற்கான தயவுகூர்ந்து அறியத் தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு நீதிமன்ற வலயங்களினால் முன்வைக்கப்பட்ட முற்பண “பீ” கணக்கின் படி 09 நீதிமன்ற வலயங்களில் தனிநபர் மிகுதி தரப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கின் மிகுதிக்கிடையே ரூபா 803,269 க்கான வேறுபாடு இருந்ததுடன் அதில் சில வெறுபாடுகள் சில வருடங்களாக இருந்து வந்தமையாகும். | 2017 யூலை 05 ஆந் திகதிய பொதுக்கணக்கு சுற்று நிருபன 256/2017 இன் 05 பந்தியின் படி தனிநபர் மிகுதி தரப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கின் மிகுதிக்கிடையில் வேறுபாடு இருப்பின் அவ் வேறுபாட்டுக்கான காரணிகளை விளக்கமாக குறிப்பிடப்பட வேண்டும். | மேல்நீதிமன்ற வலயங்களிலிருந்து முன் வைக்கப்பட்டுள்ள கணக்குகளின் படி தனிநபர் மிகுதி தரப்படுத்தலுக்கான பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் கட்டுப்பாட்டு கனவுகளுக்கிடையில் உள்ள இனங்காதுள்ள மிகுதிகள் பல வருடங்களாக இருந்து வருவதுடன் நீதிமன்றங்கள் சரியான கடன் மிகுதிகளை ஏடுகளில் குறிக்காமை மற்றும் உத்தியோகத்தர்களின் கடன் மிகுதிகளை ஒப்படைக்கும் போதும் ஏற்கும் போதும் சேர்ந்துள்ள தவறுகள் இவைகளுக்கான விசேட காரணிகளாகும். அதன்படி இனங்காதுள்ள மிகுதிகளை இனங்கண்டு அதற்கான காரணிகளை தேடிப் பார்த்து திருத்துவதற்கான விசேட கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்கும் படியும் அதன் முன்னேற்றத்தினை அமைச்சுக்கு அறியப்படுத்தும் படியும் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களுக்கு அறிவித்திருப்பதுடன் அதன் முன்னேற்றத்தினை அமைச்சினால் அடிக்கடி பரீட்சிக்கப்படும். |
| (ஈ) | கண்டி மேல்நீதிமன்ற வலயத்திற்கு இடம்மாறி வந்த ஒரு உத்தியோகத்தரின் தீர்க்கப்பட வேண்டிய ரூபா 22,380 க்கான கடன் மிகுதி 05 வருடங்களுக்கு மேலாக இருந்து வருகின்றது. | மாற்றலாகி வந்த உத்தியோகத்தர் களின் கடன் மிகுதிகள் சம்பந்தப்பட்ட நிலையங்களுக்கு தாமதமின்றி தீர்க்கப்பட வேண்டும். | இந்தக் கடன் மிகுதி சுமார் 33 வருடங்கள் பழைமை வாய்ந்த கடன் மிகுதியானதுடன் இது சம்பந்தமான யாதொரு தகவலும் கண்டுபிடித்துக் கொள்ள முடியாது இருக்கிறது. மேலும், இக்கடன் மிகுதியினை தள்ளுபடி செய்வதற்கு திறைசேரிக்கு முன் வைக்கப்பட்டிருப்பினும் |

| | | |
|---|---|---|
| | | தகவல்கள் போதைமையினால் தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |

**2.3 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 26 நீதிமன்ற வலயத்தில் ஐந்து வகையான வைப்புக்களின் கீழான 570 வைப்புக் கணக்குகளில் ரூபா 9,995,384,292 க்கான விடுதியிலும் மற்றும் தொழிலாளர் சபையின் கீழான 04 வைப்புக் கணக்குகளில் ரூபா 116,040,713 க்கான மிகுதியிலும் நிதிப் பிரமாணம் 571 பிரகாரம் செயல்பட வேண்டிய மிகுதியினை இனங்கண்டு கொள்ளப்படாது இருந்ததுடன் இவ்வைப்புக்கான கால பகுப்பாய்வும் முன் வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 571 இன் படி செயல்பட வேண்டும். | நீதிமன்ற வலயங்கள் தொடர்பாக பாரிய அளவிலான வைப்புக்கள் இருப்பதால் கால பகுப்பாய்வொன்றினை முன்வைப்பது நடைமுறை சாத்தியமில்லை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 காசு விடுவிக்கப்பட்டிருந்தும் முன்னேற்றம் காணப்படாத திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாவலப்பிட்டி பழைய நீதவான் உத்தியோகபூர்வ இல்லத்தினை அப்புறப்படுத்தி புதிய உத்தியோகபூர்வ இல்லமொன்றினை அவ்விடத்திலேயே நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தினை ரூபா 18,156,471 க்கு ஒப்பந்தக்காரருக்கு பெற்றுக் | ஒப்பந்த உடன்படிக்கைக்கு அமைவாக செயற்பட வேண்டும். | கௌரவ நீதவான் அவர்களுக்கு வாடகை அடிப்படையில் உத்தியோகபூர்வ இல்லமொன்றினை பெற்றுக் கொடுப்பதற்கு கௌரவ நீதவான் அவர்களின் பரிந்துரையுடனான உத்தேச இடத்தைப் பற்றிய |

| | | |
|---|---|---|
| கொடுக்கப்பட்டு இருந்ததுடன் 2019 ஆகஸ்ட் 02 ஆந் திகதி ஏற்றுக்கொண்டதற்கான கடிதம் வழங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 14 நாட்களுக்குள் வேலை ஆரம்பிக்கப்பட வேண்டுமாயினும், ஒப்பந்தக்காலம் 270 எனக் காட்டப்பட்டிருந்தது. எனினும், ஏற்றுக் கொண்டதற்கான கடிதம் வழங்கப்பட்டு 11 மாதங்கள் எடுக்கப்பட்டிருந்ததுடன் ஆனால் 2020 யூலை 02 ஆந் திகதி வரையில் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாமையுடன் வேலை தொடங்குவதற்கான முற்பணமாக 2019 நவம்பர் 27 ஆந் திகதி ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 5,474,984 ஆன (VAT வரியுடன் கூடிய) தொகை 07 மாதங்களுக்கு அதிகமாக ஒப்பந்தக்காரரினால் தக்க வைக்கப்பட்டிருந்தது. | | தகவல்கள் நீதிச் சேவை ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. ஆயினும், இதற்கான அங்கீகாரம் பெற்றுக்கொடுப்பது தாமதமாகியிருப்பதுடன் அது பற்றி விசாரித்ததில் உத்தேச இடத்திற்கு பதிலாக வேறொரு இடத்தினை தேடிக் கொள்வது உசிதமென நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் 2019 திசெம்பர் 19 ஆந் திகதி காட்டியுள்ளார். அதன்படி செயலாற்றி வேறு ஒரு பொருத்தமான உத்தியோகபூர்வ இல்லமொன்றினை தேடிக் கொடுத்ததன் பின் 2020 யூலை 06 ஆந் திகதி இக்காணியில் புது உத்தியோகபூர்வ இல்லத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிப்பதற்கு ஒப்பந்த நிலையத்திற்கு பொறுப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. |

### 3.2 வேலைகள் ஆரம்பிக்கப்படாத திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கந்தலையில் புது நீதிமன்றம் ஒன்றினை அமைப்பதற்காக இனங்கண்டு அதற்காக 2018 முதல் 2020 வரை மூன்று வருடங்களுக்குள் நிதி ஒதுக்கீடு பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததுடன் 2018 ஆம் ஆண்டிற்கான ரூபா 100 மில்லியனுக்கான ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டிருந்தது. ஆயினம், அவ்வாண்டில் இத்திட்டம் | மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட ஒதுக்கீடு சம்பந்தப்பட்ட காரியத்திற்கு ஈடுபடுத்தப் பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு சம்பந்தமான இடைக்கால அங்கீகரிக்கப்பட்ட கணக்கின் மூலம் இந்த பெறுகை காரியத்திற்காக ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டிராது இருந்ததுடன் 2019 ஆம் ஆண்டிற்கான வரவு செலவினை வெளியிடும் வரை இப்பெறுகையினை முடிக்க முடியாமல் இருந்தது. அக்காரணத்தினால் |

| | | |
|---|---|---|
| செயல்படாததினால் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிலும் இந்நீதிமன்றத் தொகுதி உட்பட இன்னும் மூன்று நிர்மாணப் பணிக்கான குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 273,740,000 வும் நிதிப்பிரமாணம் 66 மாற்றப்படுவதன் மூலம் ரூபா 40,000,000 வும் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தன. 2019 சனவரி 28 ஆந் திகதிய பெறுகைக் குழுவினது அனுமதியுடன் 2019 யூன் 24 ஆந் திகதிய அங்கீகார கடிதத்தினை ஒப்பந்தக்காரருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதும், 2020 யூலை 15 ஆந் திகதியாகியும் திட்டத்தினை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | விலைமனு முன்னளிக்கும் காரணம் முடிக்க முடியாமற் போனதுடன் விலைமனு செல்லுபடிகாலம் 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் விலைமனு பிணை செல்லுபடி காலம் 2019 யூன் 28 ஆந் திகதி வரையிலும் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு விலைமனு பிணையின் செல்லுபடி காலத்தினுள் அதாவது 2019 யூன் 24 ஆந் திகதி அங்கீகார கடிதத்தினை தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் முன்வைத்துள்ளார். |

### 3.3 சொத்திற்கான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நுகேகொடை நீதிவான் நீதிமன்றத்தின் 2018 ஆம் ஆண்டிது பொருட் கணிப்பு சம்பந்தமாக 2016 மார்ச் 31 ஆந் திகதிய இலக்கம் 05/2016 கொண்ட பொது நிதி சுற்று நிருபத்தின் 3.2.5 பிரிவின் படி 2020 சனவரி 23 ஆந் திகதியாகியும் செயற்பட்டிருக்கவில்லை. | 2016 மார்ச் 31 ஆந் திகதிய இலக்கம் 05/2016 கொண்ட பொது நிதி நிருபத்தின் 3.2.5 பிரிவில் குறிக்கப்பட்டிருப்பது போல் செயற்பட வேண்டும். | 2020 ஆகஸ்ட் 13 ஆந் தகிதி ஆகியும் விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) இலங்கையில் 33 நீதிமன்ற வலயங்களுக்கு சொந்தமான 221 நீதிமன்றங்கள் அமைந்த காணிகளுள் காணிகளின் அளவினை குறிப்பிடப்படாத நீதிமன்றங்களின் எண்ணிக்கை 50 தும் காணியின் சொந்தத்தினை நீதி அமைச்சுக்கு சொந்தம் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளாத காணிகளின் எண்ணிக்கை 47 உம் காணியின் பெயரினை குறிப்பிட முடியாத நீதிமன்றங்களின் எண்ணிக்கை 135 உம் நில அளவையாளர் திட்டப் படம் இல்லாத காணிகள் 70 உம் சுவீகரிப்புச் சான்றிதழ் இல்லாத காணி 188 உம் இருந்தமையுடன் காணியின் பெறுமானத்தினை மதிப்பீடு செய்யப்படாத காணிகளின் எண்ணிக்கை 174 ஆகும். | நீதி அமைச்சுக்குச் சொந்தமான காணிகளின் பெயர், அளவு நில அளவையாளர் திட்டப்படம் சுவீகரிப்புச் சான்றிதழ் மற்றும் மதிப்பீட்டுப் பெறுமானத்தினை உறுதிப்படுத்திக் கொண்டு அவைகளை சரியான மதிப்பீட்டு பெறுமானத்தின் கீழ் கணக்கிலிடப்பட வேண்டும். | 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரையிலும் விடையளிக்கப்படவில்லை. |

## 3.4 பணமோசடி மாதிரியான கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பூகொடை மாவட்ட / நீதவான் நீதிமன்றில் 2018 மற்றும் 2019 வருடங்களில் போலி ஆவணங்கள் தயார் செய்து காசாளர் பதவியில் கடமையாற்றிய உத்தியோகத்தரினால் ரூபா 1,190,071 தவறான முறையில் பாவனை செய்யப்பட்டிருந்தது. | இவ்வாறான முறைகேடுகள் நிகழா வண்ணம் உள்ளக நிர்வாக முறைமையினை வலுப்படுத்துதல் வேண்டும். | நீதிமன்றங்களுக்கு பணம் செலுத்தும் தரப்பினரிடமிருந்து செலுத்தல் வவுச்சர் ஒன்றினை (PIV-பொது 118 படிவம்) நிரப்பி வாங்கிக் கொள்ளும் திட்டம் ஒன்றை செயல்படுத்துவதன் மூலமாக எதிரில் இவ்வாறான பணமோசடிகள் |

ஏற்படுவதனை ஓர் அளவிலாவது கட்டுப்படுத்த முடியுமென தெரிவித்தனுப்பப்பட்டது.

### 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நாவலப்பிட்டி நீதிவான் நீதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தின் நிர்மாணிப்பு 2019 வருடாந்த செயல்படு திட்டம் மற்றும் வருடாந்த பெறுகை திட்டத்தினுள் உட்பட்டிருந்த போதிலும், அத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ஆரம்ப கட்ட தேவையான நிர்மாண பணிக்கு சம்பந்தப்பட்ட பூமியினை தீர்த்துக் கொள்ளப்படாமையினால் திட்டத்தினை ஆரம்பிக்க முடியாது உள்ளது. | நிர்மாணப் பணிகள் ஆரம்பிப்பதற்கு முன்னதாக நிலத்தின் பிரச்சினையினை தீர்த்து வைக்கப்பட வேண்டும். | இந் நிர்மாணப் பணிகள் 2019 ஆம் ஆண்டின் செயற்படு திட்டம் மற்றும் வருடாந்த பெறுகைத் திட்டத்தினுள் உட்படுத்தி செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு சமாந்திரமாக உத்தியோகபூர்வ இல்லத்தினை காலி செய்வதற்கும் வருட ஆரம்பத்திலிருந்து தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஆயினும், எதிர்பாராத விதமாக வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு எதிர் பார்த்திருந்த இல்லத்திற்கு பதிலாக வேறொரு இல்லத்தினை பெற்றுக் கொள்ள நேர்ந்தமையினால் திட்டத்திற்கான நிலத்தினை விடுவிப்பதற்கு தாமதம் ஆயிற்று. |
| (ஆ) | நுகேகொடை நீதிவான் நீதிமன்றத்தில் பொருத்தப்பட்டிருந்த CCTV கமரா முறைமை 2018 திசெம்பர் 05 ஆந் திகதி ஆகையில் செயலிழந்து அதை திருத்துவதற்காக வருடாந்த சேவையினை செய்து கொடுக்கும் | செயலிழந்த நிலையில் இருந்த ஊஊவுஎ கமரா முறைமையினை உடன் திருத்திக் கொள்ளப்பட வேண்டும். | 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | நிலையத்திடமிருந்து பெற்றுக்கொண்ட ரூபா 232,731 க்கான மதிப்பீட்டினை 2018 திசெம்பர் 24 ஆந் திகதியன்று கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு முன்வைக்கப்பட்டு மீண்டும் 2019 திசெம்பர் மாதம் ஞாபக மூட்டப்பட்டும் 2020 சனவரி 20 ஆந் திகதி வரையிலும் இந்த CCTV கமரா முறைமையினை திருத்தம் செய்யப் பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | நீதி சேவைகள் ஆணைக்குழு செயலாளரின் 2019 திசெம்பர் 19 ஆந் திகதிய இரண்டு "பக்ஸ்" செய்திகள் மூலம் அப்போதைக்கு நுகேகொடை நீதிவான் நீதிமன்றத்தில் சேவையாற்றிக் கொண்டிருந்த நீதிமன்ற பதிவாளர் இதுவரையும் உடன் அமுலுக்கு வரும் படி இடமாற்றம் செய்யப்பட்டிருந்ததுடன் 2020 சனவரி 20 ஆந் திகதியாகியும் அவர்கள் பொறுப்பிலிருந்த வழக்கு சம்பந்தப்பட்ட பொருட்கள், ஆவணங்கள் இரும்பு வீரோச்சாவிகள் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | மாற்றலாகி செல்லும் உத்தியோகத்தர் பொறுப்பிலுள்ள வழக்கு சம்பந்தப்பட்ட பொருட்கள், ஆவணங்கள் மற்றும் இரும்பு பீரோ சாவிகள் ஆகியவற்றை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிடம் பொறுப்புக் கொடுப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரையிலும பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நுகேகொடை நீதிவான் நீதிமன்றம் தொடர்பாக 2019 செப்தெம்பர் 19 ஆந் திகதி முதல் 2019 திசெம்பர் 26 ஆந் திகதி வரையிலான காலத்தினுள் வங்கியில் நேரடியாக வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 1,132,860 வினை 2020 சனவரி 20 ஆந் திகதியாகியும் இனங்கண்டு கணக்கிலிடப்படாது இருந்ததுடன் அப் பெறுகைகள் உட்படுத்தப்பட்டும் இருக்கவில்லை. | வங்கிக்குக் கிடைக்கும் நேரடி பெறுகைகளை இனங்கண்டு கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரையிலும பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (உ) | நுகேகொடை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்பான பொருட்கள் சம்பந்தமாக கீழுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | ஏலத்தில் விடுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதா என வழக்குப் பதிவுகளை பரீட்சித்து பார்க்காமையினால் நீதிமன்ற வளவில் 46 வாகனங்கள் தரித்து வைக்கப்பட்டிருந்தன. | ஏல விற்பனையில் விடுவதற்கு தீர்மானம் கிடைத்துள்ளதா என வழக்குப் பதிவுகளை பரீட்சிப்பதன் மூலம் உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும். | 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்படவில்லை. |
| (ii) | நீண்டகாலமாக நீதிமன்ற வளவில் தரித்து வைக்கப்பட்டிருந்த 8 வாகனங்கள் சம்பந்தப்பட்ட வழக்கு இலக்கங்கள் மற்றும் வழக்குப் பதிவுகள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கவில்லை. | ஏல விற்பனையில் விடுவதற்கு தீர்மானம் கிடைத்துள்ளதா என வழக்குப் பதிவுகளை பரீட்சிப்பதன் மூலம் உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும். | 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்படவில்லை. |
| (iii) | 18 வாகனங்களுக்கான 2019 ஆம் ஆண்டு மதிப்பீட்டு பெறுமானம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தும் | வழக்குப் பதிவுகளை பரீட்சித்துப் பார்த்து ஏல விற்பனையில் விடுவதற்கு உத்தரவு பெற்றுக் | 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | 2020 சனவரி 22 ஆந் திகதி வரையிலும் அவை தொடர்பான வழக்குப் பதிவுகள் வழக்கு சம்பந்தப்பட்ட பொருட்கள் பிரிவுக்கு கிடைக்கப்பட்டிருக்க வில்லை இவற்றில் 14 வாகனங்கள் 2020 வருடம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. | கொள்ளப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்திக் கொண்டு மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். | |
| (iv) | 2019 யூலை மாதம் 07 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட ஏல விற்பனைக்கு முன் வைக்கப்பட்டிருந்த 12 சைக்கிள்கள் சம்பந்தமான வக்குப் பதிவுகள் கண்டு பிடிக்கப்படாமையினாலும் 04 சைக்கிள்களின் வழக்கு செயற்பாடுகள் முடிவுறாது இருந்தமையினாலும் ஏல விற்பனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு இருந்ததுடன் 2020 சனவரி 22 ஆந் திகதி வரையிலும் 12 சைக்கிள்களின் வழக்குப் பதிவுகள் வழக்கு தொடர்பான பொருட்கள் பிரிவுக்கு கிடைத்திருக்கவில்லை. | வழக்கு செயற்பாடுகள் முடிவுற்றுள்ளதா என சரியாக உறுதிப்படுத்திக் கொண்டு பொருட்கள் ஏல விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்படவில்லை. |
| (v) | வழக்குப் பொருட்களாக நீதிமன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காசு இரும்பு பீரோக்களில் வைக்கப்பட்டிருந்தன. | வழக்குப் பொருட்களாக தடுத்து வைக்கும் காசு நீண்டகாலம் இரும்பு பீரோக்களில் வைப்பதற்குப் பதிலாக வேறு பொருத்தமான ஏற்பாடொன்றினை அமைப்பதற்கான சாத்திய கூற்றினை தேடிக் கண்டுபித்தல் வேண்டும். | 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்படவில்லை. |

## 4. மனிதவளங்கள் முகாமைத்துவம்

### 4.1 மனிதவள அபிவிருத்தி திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 சனவரி 24 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்று நிருபஇலக்கம் 02/2018 படி நிலையத்தின் மனித வள அபிவிருத்தி திட்டமொன்றினை தயாரித்து இருக்காததுடன் சுற்று நிருபத்தின் 6.5 பந்தியின் படி மனித வள அபிவிருத்தி திட்டத்தினை தயாரித்தல், கனகொளள்வு அபிவிருத்தி திட்டத்தினை தயாரித்தல், திறன் அபிவிருத்தி நிகழ்ச்சியினை நடாத்துதலுக்கான பொறுப்பினை நிலையத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 சனவரி 24 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்று நிருப இலக்கம் 02/2018 பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்படவில்லை. |

### 4.2 பணிக்குழுவின் தகவல்கள் இற்றைப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பணிக் குழுவின் மாற்றத்திற்கேற்ப இற்றைப் படுத்தப்பட்ட பணிக்குழுவின் தகவல் ஒவ்வொரு நான்கு மாதமும் முடிவுற்று ஒரு மாதத்தினுள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை. | 2017 செப்தெம்பர் 20 ஆந் திகதிய இலக்கம் 04/2017 கொண்ட முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் படி செயல்பட வேண்டும். | 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்படவில்லை. |

## 4.3 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான ஊழியர் எண்ணிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலையத்தின் ஊழியர் எண்ணிக்கையினை பற்றி விசாரிக்கப்பட்ட தகவல்களுக்கு பதிலளிக்கப்பட்ட போது 2019 திசெம்பர் 31 இல் ஆரம்ப மட்டத்திலான 06 பதவிகளுக்கு மாத்திரம் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 3,873 எனவும் உண்மையான ஊழியர் எண்ணிக்கை 3,588 எனவும் மற்றும் வெற்றிட எண்ணிக்கை 285 எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும் முழுமையான பணிக் குழு பற்றிய தகவல்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையத்தின் முழுமையான பணிக்கு தொடர்பாக தகவலினை கணக்காய்விற்கு முன் வைக்கப்பட வேண்டும். | 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்படவில்லை. |